நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

# CC No.25/2020

**2021**-ம் ஆண்டு **மார்ச்** மாதம் **31**-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி **அ..சா.21** -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலியமூர்த்தி | வயது | |
| தகப்பனார் பெயர் | | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் வலங்கைமான் கடைத்தெருவில் வசித்து வந்து தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். எனக்கு பட்டியல் சாட்சி 7, அ.சா.6 சக்திவேல் தவிர அ.சா.1 முதல் அ.சா.5, அ.சா.7 முதல் அ.சா.20 வரையுள்ளார்களையும் மற்றும் ஆஜர் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியாது. ஆஜர் 1வது எதிரி சக்திவேல் மட்டும்தான் தெரியும். கடந்த 2018 ம் வருடம் ஆஜர் 1வது எதிரியிடம் என் வேலைக்காக என் மாமா கணபதி மூலம் ஆஜர் 1வது எதிரி சக்திவேல் வீட்டில் வைத்து ரொக்கமாக ரூ.1,00,000/-த்தை கொடுத்தேன். பிறகு இரண்டு மாதங்கள் வேலை கிடைத்துவிடும் என்று சொன்னதால் நான் காத்திருந்தேன். ஆனால் அதேபோல் ஒரு வருடம் வரை வேலை கிடைக்கும் என்று காத்திருந்தும் எந்த தகவலும் வரவில்லை உடன் நாங்கள் என்ன செய்யலாம் என்று நினைத்தபோது திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து தொலைபேசி தகவல் வந்து உடன் சென்றேன். அங்கு சென்று பார்த்த பிறகுதான் என்னைபோல் இன்னும் பலர் ரூ.87,00,000/-த்தை கொடுத்து ஏமாற்றியுள்ளார்கள் என்ற விபரத்தை தெரிந்துக்கொண்டேன். அனைவரும் ஆஜர் 1வது எதிரியிடம்தான் பணம் கொடுத்ததாக சொன்னார்கள். இது சம்பந்தமாக என்னை போல் பாதித்த நபரின் ஒருசிலர் சேர்ந்து புகார் கொடுத்துள்ளார்கள்என்று கேள்விபட்டேன். இது சம்பந்தமாக என்னை போலிசார் விசாரணை செய்தார்கள்.

குு.வி. (1வது எதிரி தரப்பில்)

நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். நான் 12ம் வகுப்பு வரைபடித்துள்ளேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் 1வது எதிரி சக்திவேல் மட்டும் எனக்கு தெரியும். முதல் விசாரணையில் சாட்சி பட்டியலில் உள்ள சக்திவேல் என்பவரை தெரியும் என்று கூறியுள்ளேன். அந்த சக்திவேல் ஆஜர் எதிரி இல்லை என்றால் நான் ஆஜர் எதிரியை தான் தெரியும் என்று கூறினேன். இந்த வழக்கில் யார் புகார்தாரர் என்று நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் எனக்கு தெரியாது. ஆஜர் 1வது எதிரியிடம் நானும், என் மாமாவும் சென்று பணம் கொடுத்தோம். எனது மாமா பெயர் கணபதி. அவர் பலமுறை வந்து சக்திவேலிடம் கேட்டுள்ளாரா என்றால் கேட்டுள்ளார். எனது மாமா 1வது எதிரி சக்திவேலையும், 2வது எதிரி கோவிந்தலெட்சுமியையும் நேரில் பார்த்துள்ளாரா போனில் பேசியுள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. எனது மாமனாரை சாட்சியாக கூப்பிட்டால் வருவாரா என்றால் வருவார். நான் போலிஸ் விசாரணையில் 1வது எதிரி சக்திவேலிடம் பணம் கொடுக்கும்போது 2வது எதிரி கோவிந்தலெட்சுமி கோர்ட்டில் வேலை செய்கிறார் அவர்மூலமாக வேலை வாங்கி தருவதாக கூறியதாக கூறியுள்ளேன். போலிஸ் விசாரணையில் நான் அவர்கள் இருவரும் மோசடியாக பணம் பெற்றுள்ளார்கள் என்றும் கூறியுள்ளேன். எனக்கு மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து போன் மூலம் அழைப்பு வந்ததும், நானும் என் மாமனாரும் வந்தோம். எந்த தேதியில் வந்தோம் என்று எனக்கு ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் கையெழுத்து எதுவும் போடவில்லை. ஆனால் எழுதி கொடுத்துவிட்டு சென்றேன். நான் கம்யுட்டரில் டைப் செய்து கொடுத்தேனா இல்லை எழுதி கொடுத்தேனா என்றால் நான் எழுதிதான்கொடுத்தேன். 2வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்து வருவதால்தான் எப்படியும் வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் 2வது எதிரி தகவலின் பேரில் 1வது எதிரியிடம் பணம் கொடுத்தேன். நான் 2வது எதிரியையும் நேரில் பார்த்துள்ளேன் என்றாலும், தற்போது மாற்றி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1வது எதிரி தன்னை 2வது எதிரி ஏமாற்றி விட்டதாக புகார் கொடுத்த விஷயம் நான் தெரிந்துக்கொண்டேன், 1வது எதிரிதான் என்னிடம் கூறினார். 1வது எதிரி கொடுத்த புகாருக்கு பிறகுதான் போலிசார் என்னை கூப்பிட்டு விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் தற்போது கூறியதைதான் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன்.

**கு.வி. ( 2 வது எதிரி தரப்பில்)**

2 வது எதிரி கோவிந்தலெட்சுமியை இந்நாள் வரை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 2 வது எதிரி கோர்ட்டில் வேலை பார்க்கிறார் என்று 1வது எதிரி சொல்லிதான் எனக்கு தெரியும், மற்ற விபரங்கள் எதுவும் நேரடியாக தெரியாது.

## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

## CC No. 25/2020

**2021**-ம் ஆண்டு **மார்ச்** மாதம் **31**-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி **அ..சா.22** -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகப்ரியா | வயது | |
| கணவர் பெயர் | கண்ணன் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் வடபாதிமங்கலத்தில் வசித்து ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு பட்டியல் சாட்சி 6, அ.சா.6 சக்திவேல் தவிர அ.சா.1 முதல் அ.சா.5, அ.சா.7 முதல் அ.சா.20 வரையுள்ளார்களையும் மற்றும் ஆஜர் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியாது. ஆஜர் 1 வது எதிரி சக்திவேல் மட்டும்தான் தெரியும். கடந்த 2018 ம் வருடம் பிப்ரவரி மாதம் தேதி ஞாபகம் இல்லை ஆஜர் 1 வது எதிரியிடம் என் அண்ணன் மூலம் பழக்கம் ஏற்பட்டு எனக்கு நீதிமன்றத்தில் உதவியாளராகவோ, அல்லது இளநிலை எழுத்தராகவோ வேலை வாங்கி தருகிறோம் என்று சொல்லி ஆஜர் 1 வது எதிரிசக்திவேல் என் அண்ணனிடம் கூறி அவருடன் எங்களிடம் சொல்லி நாங்கள் உடன் என்னுடைய நகையை அடமானம் வைத்து அந்த தொகை ரூ.1 லட்சத்தை ஆஜர் 1 வது எதிரியின் வீட்டில் வைத்து நானும், என் கணவர், என் அண்ணன் மூவரும் சேர்ந்து போய் ரொக்கமாக கொடுத்தோம். பிறகு இரண்டு மாதங்கள் கழித்து ஆஜர் 1 வது எதிரி சக்திவேலிடம் வேலை சம்பந்தமாக கேட்டபோது விரைவில் உத்தரவு வந்துவிடும், உத்தரவு வந்தவுடன் நான் தகவல் உங்களுக்கு சொல்கிறேன் என்று கூறினார். தொடர்ந்து ஒரு வருட காலம் இதேபோல் பதிலை சொல்லிக்கொண்டு வந்தார்,வேலையும் கிடைக்கவில்லை, பிறகு கடந்த 2019 ம் வருடம் நான் வீட்டில் இருந்தபோது எனக்கு திருவாரூர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து தொலைபேசி மூலம் நீங்கள் ஏதாவது

வேலைக்காக யாரிடமாவது பணம் கொடுத்துள்ளீர்களா? என்று கேட்டார்கள். உடன் நான் ஆமாம் என்று சொன்னவுடன் அவர்களது அலுவலகத்திற்கு அழைத்தார்கள். பிறகு இது சம்பந்தமாக பல நபர்களை வேலை வாங்கி தருவதாக சொல்லி ஏமாற்றியுள்ள விபரம் தெரிந்துக்கொண்டேன். புகாரும் கொடுத்திருந்தார்கள். அந்த புகார் சம்பந்தமாக என்னை போலிசார் விசாரணை செய்தார்கள்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

நான் வடபாதிமங்கலத்தில் இருக்கிறேன். ஆஜர் இரண்டு எதிரிகளையும் நான் பார்த்துள்ளேனா என்றால் ஆஜர் 1வது எதிரியை மட்டும்தான் பார்த்திருக்கிறேன். 1வது எதிரியும் எனது அண்ணன் அண்ணாதுரையும் நல்ல நண்பர்கள் என்பதால் அண்ணனின் தகவலின் பேரில் வேலை பெற்றுக்கொள்ள 1வது எதிரியிடம் தொகை செலுத்தினேன். ஆஜர் 2வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்கிறார் என்பதை விசாரித்து என் அண்ணன் அண்ணாதுரை தெரிந்துக்கொண்டபிறகுதான் 1வது எதிரியிடம் தொகை செலுத்தினார். 1வது எதிரியை நான் நேரிடியாக கேட்டு தெரிந்துக்கொண்டேன், அவர் 2வது எதிரி எனக்கு பழக்கமானவர் ஆதலால் கண்டிப்பாக வேலை கிடைக்கும் என்று நம்பிக்கையாக சொன்னதன் பேரில் நாங்கள் 1வது எதிரியிடம் பணம் கொடுத்தோம். நான் பணம் கொடுக்கும் சமயத்தில் 2 வது எதிரி 1வது எதிரியின் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தார் என்ற விபரத்தை நான் தெரிந்துக்கொள்ளவில்லை. என் கணவர் பெயர் கண்ணன். என் கணவர் அடிக்கடி 1வது எதிரி சக்திவேலை சென்று பார்ப்பார். என் கணவர் அவருடன் நன்றாக பேசுவார். அதேபோல் என் கணவர் 2வது எதிரியிடமும் வேலை சம்பந்தமாக பேசுவார் என்றால் என்னிடம் சொல்லவில்லை. வேலை சம்பந்தமாக என் கணவர் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் கேட்டபோது வேலை வாங்கி தந்துவிடுவேன் இல்லையொன்றால் பணத்தை தந்துவிடுவேன் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். எதிரிகள் வேலை வாங்கி தருவதாக கூறி பணமோசடி செய்த விபரம் எனக்கு தெரியும். யார் எனக்கு அந்த விபரத்தை சொன்னார்கள் என்றால் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கூறினார்கள். இது சம்பந்தமாக நான் தனியாக எந்த புகாரும் கொடுக்கவில்லை. யார் கொடுத்த புகாரில் நான் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்று எனக்கு தெரியாது. இந்த பிரச்சனைக்கு முன்பாக 1வது எதிரி 2வது எதிரி மீது புகரர்

கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. என் கணவர் 1வது எதிரியிடம் அடிக்கடி வேலை சம்பந்தமாக கேட்டுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும். என் கணவர் சாட்சி சொல்ல கூப்பிட்டால் சாட்சி சொல்ல வருவார். என்னை எந்த தேதியில் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கூப்பிட்டார்கள் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. பிப்ரவரி அல்லது மார்ச் 2019 அன்று கூப்பிட்டார்கள். நான் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் என்னை விசாரித்தபோது நான் 1வது எதிரியிடம் பணம் கொடுத்ததாக கூறினேன். அதை நான் எழுதி புகாராகவும் கொடுத்தேன். என்னை வடபாதிமங்கலத்திலும் போலிசார் வந்து விசாரித்தார்கள். என்ன தேதியில் என்னை விசாரித்தார் கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. என்னை மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் விசாரணை செய்த பிறகு வடபாதிமங்கலத்தில் விசாரணை செய்தார்கள். நான் தற்போது கூறியுள்ளதை போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன். நான் 1, 2 எதிரிகளை பார்த்திருக்கிறேன், ஆனால் 1வது எதிரியை மட்டும் பார்த்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. ( 2 வது எதிரி தரப்பில்)**

போலிசார் விசாரணையில் என்னுடைய அண்ணன் அண்ணாதுரை 2 வது எதிரியை சந்தித்து வேலை பற்றி ஊர்ஜிதம் செய்யப்பட்ட பின்புதான் பணம் தரப்பட்டது என்றால் சரிதான். எனது கணவர் வேலை தொடர்பாக 2 வது எதிரியிடம் பேசினார் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். இதுநாள் வரை என் கணவர் மற்றும் என் அண்ணன் அண்ணாதுரை ஆகியோர் 1வது எதிரியிடம் பணம் கேட்டு வருகிறார்கள். 1வது எதிரி பணம் தருவதாக கூறி வருகிறார். தற்போது 1வது எதிரி 2 வது எதிரியை சம்பந்தப்படுத்தி மேற்கண்ட இரண்டு சங்கதிகளை முன்னிருத்தி சாட்சியமளித்தால் பணம் தருவதாக ஆசை வார்த்தை காண்பித்ததால்தான் 1வது எதிரியின் குறுக்கு விசாரணையின்போது அண்ணாதுரை 2 வது எதிரியை சந்தித்தார் என்று என் கணவர் 2 வது எதிரியை சந்தித்து கேட்டார் என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.